**சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்புபடுத்தல் தொழில்நுட்ப நிதியம் - 2014**

சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்புபடுத்தல் தொழில்நுட்ப நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமானச் செலவுக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியத்திற்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் ரூபா 6,240,000 மற்றும் ரூபா 11,232,000 தொகை குறிப்பாக இனங்காணப்படாமல் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படாமையின் காரணமாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,263,653,478 தொகையான காசு மீதி ரூபா 1,163,604,978 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்காக 04 விமானக் கம்பனிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,587,000 கூட்டுத்தொகையான மேலதிகநேரப் பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 187,062,591 இல் ரூபா 21,728,553 தொகைக்காக 5 சதவீத அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தமையால் ஏற்பாட்டு சதவீதத்தைத் தீர்மானிக்கும் போது அந்த நிச்சயமற்ற தன்மையை கவனத்தில் கொண்டு போதியளவான ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 11,232,000 வருமானமொன்று நிதியத்தின் வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியியில் உள்ளவாறு ரூபா 187,062,591 தொகையான கடன்பட்டோர் மீதியில் ரூபா 167,702,402 தொகை அதாவது 89.79 சதவீதம் 9 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) பல வருடகாலமாக மாற்றமுறாத செலவின விடயங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 7,017,198 கூட்டுத்தொகையான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ரூபா 1,730,375 கூட்டுத்தொகையான நடைமுறைப் பொறுப்புக்கள் என்பவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் தெரிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ரூபா 174,342,471 கூட்டுத்தொகையான 30 கடன்பட்டோர் மீதிகள் தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

102 கப்பல் முகவர் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள பிணைப்பொறுப்பு உடன்படிக்கைகளுக்குரித்தாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வைப்புக்கள், பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு 2007 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1520/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 73,157,047 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 20,318,093 ஆக இருந்தது. மீளாய்வாண்டின்

செயற்பாட்டு விளைவுகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 93,475,140 இனால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக மேலதிக நேர வருமானம் 20 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் மேலதிக நேர நிதியம் மற்றும் கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டண நிதியத்தின் பயன்படுத்தப்படாத பண மீதி ரூபா 28,007,949 முதல் ரூபா 1,724,501,472 வரையான அதிகரிப்பினைக் காட்டியிருந்ததுடன் திறைசேரியுடன் கலந்துரையாடி அந்நிதியை பொருத்தமான முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் சனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான மாத காலப்பகுதியில் ஏற்றுமதிப் பிரிவில் வெளி பரீட்சிப்பு கட்டண கொடுப்பனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளி பரீட்சிப்பிற்காக உத்தியோகத்தர்களுக்கு சமமான சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் கடமை கையளிக்கப்படாமையின் காரணமாக உத்தியோகத்தர்களுக்கு மாதத்திற்கு ரூபா 32,413 முதல் ரூபா 194,000 வரையான வீச்சில் வெளி பரீட்சிப்பு கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி சுங்க உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற அலுவலகத்திலோ அல்லது சேவைக்கு நியமிக்கப்பட்ட நிலையத்திலோ தவிர ஏனைய எந்தவொரு அலுவலகத்தில் அல்லது நிலையமொன்றில் கடமைகளில் ஈடுபட்டதற்காக கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டணம் செலுத்தும் போது நிதி அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின் படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், 2014 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் மாத்திரம் அவ்வாறு அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டணத் தொகை ரூபா 15,020,515 ஆகும்.

(ஈ) ஸ்ரீ லங்கன் எயார் லைன் விமானக் கம்பனியிலிருந்து 2011 ஆம் ஆண்டின் இறுதி 4 மாதங்களுக்கும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய மேலதிக நேரத் தொகைக்கான பட்டியல்கள் 2015 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன்படி நிதியத்தின் மேலதிக நேர வருமானத்தை சேகரித்தல் தொடர்பில் உயர் முகாமைத்துவத்தின் மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டது. மேலும் மேலதிக நேர வருமானம் குறிப்பிட்ட காலப்பகுதியின் போது அறவிடுவதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுக்காமையினால் நிதியத்தின் வருமானம் தேவையற்ற வகையில் வெளித்தரப்பினர்களின் கைகளில் தங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(உ) விமானக் கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய மேலதிக நேரப் பணத்திற்காக விலைப்பட்டியல் தயாரிக்கும் போது கணக்குப் பிரிவின் உத்தியோகத்தரொருவரினால் விமானங்களின் வருகை, வெளிச் செல்லல் தொடர்பான விபரங்கள் நேரடியாக ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் விமானக் கம்பனியிடமிருந்துபெறப்பட்டிருந்த போதிலும், அந்தத் தகவல்களின் சரியான தன்மை தொடர்பாக அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட நபரொருவரின் உறுதிப்படுத்தலோ அல்லது சுங்கத்தின் தலையீடொன்றோ அவதானிக்கப்படாதிருந்ததுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட பட்டியல்கள் மீளப் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

1967 முதல் 1973 வரையான காலப்பகுதியில் 75 நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 263,500 தொகையான ஆரம்ப வைப்புப் பணம், சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பெறப்பட்டிருந்த வட்டி ரூபா 11,434,993 ஆக இருந்தது. வருடக் கணக்காக இப்பணம் சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்த காரணத்தால் மிகவும் குறைந்த வட்டி வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முன்னைய பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் குறித்த பணத்தை வேறு பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 5 நிறுவனங்கள் தொடர்பான வங்கிப் புத்தகங்களின் படியான மீதிகளுக்கும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்குமிடையே ரூபா 8,545 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

முறையான அங்கீகாரமின்றி 2013 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் மேலதிக நேர மீளாய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு 45 சதவீதத்தால் அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி நிதியங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 மே 12 ஆந் திகதியும் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 16 ஆந் திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி வருடாந்த பாதீடு, அதற்கு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 15 ஆந் திகதிக்கு முன் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் பாதீட்டிற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. நிதிக் கட்டுப்பாடு
ii. மேலதிக நேர கொடுப்பனவுக் கட்டுப்பாடு
iii. கணக்கீடு
iv. பேரேட்டுக் கணக்கும் பதிவேடுகளைப் பேணலும் பராமரித்தலும்